**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 408/2019**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 5 |
| Name | : Tr. நித்தியானந்தம் |
| Father/Husband's Name | : ஆறுமுகம் |
| Village | : நெ.24 ஏ, பெரிய செட்டி தெரு |
| Taluk | : பெரியநத்தம், செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.09.2024.

Accused present.

**முதல் விசாரணை—**

நான் தற்போது செங்கல்பட்டு பெரியநத்தம் கிராமத்தில் வசித்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனக்கு தெரியாது. 3 வருடங்களுக்கு முன்பு செங்கல்பட்டு நகர போலிசார் என்னை கூப்பிட்டார்கள். என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் கையொப்பம் வாங்கிய ஆவணத்தில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. அவர்களாகவே நான் தான் அழைத்து சென்றதாகவும், மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் கூறியுள்ளார்கள்.

**இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மகன் குமரன் என்றால் சரிதான். நான் கூலி வேலை செய்கிறேன் என்றால் சரிதான். TN 19 Q 9313 என்ற யமகா ரே என்ற வாகனம் என்னுடையது என்றால் சரிதான். எனது மகன் மேற்படி வாகனத்தை எடுத்து சென்று பின்னால்

அமர்ந்து செல்லும் போது தான் விபத்து நடந்தது என்று சொன்னால் வீட்டில் இருந்த வண்டியை மெடிக்கல் ஷாப்பிற்கு எடுத்து சென்றதாக தான் தெரியும். மற்ற விவரம் தெரியாது. எனது மகன் மற்றும் ஆஜர் எதிரியும் எனது இருசக்கர வாகனத்தை எடுத்து செல்லும் போது தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் ஆஜர் எதிரி சென்றாரா என்ற விவரம் எனக்கு தெரியாது.

04.09.2018 அன்று நான் தான் ஆஜர் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று இது சம்மந்தமாக ஆஜர் செய்தேன் என்று சொன்னால் எனது மகனை காவல் நிலையத்தில் வைத்து கொண்டு எனக்கு போன் செய்தார்கள் நான் சென்றேன். ஆஜர் எதிரியை நான் அழைத்து செல்லவில்லை. விபத்து நடந்தது எனது வாகனத்தை எனது மகன் எடுத்து சென்ற போது தான் அதனால் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள் எனது மகன் இருந்தார் மற்றவர்கள் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–** இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya
Judicial Magistrate No.I,
Chengalpattu.